


ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர் 'கொடி காத்த குமரன்' திருப்பூர் குமரன் அவர்களின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி ரூபாய் 250.00 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தனர். இதில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் அவர்கள், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.






கோவை மாவட்டம், அன்னூர் (சிறப்பு நிலை) பேரூராட்சியில் ரூபாய் 181.15 இலட்சம் மதீப்பீட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு அரசு நலத்திட்ட பணிகளை கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா துவக்கி வைத்து தாய்மார்கள் பாலூட்டும் அறையை திறந்து வைத்தார். இதில் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் இரா.பரமேஸ்வரன், அன்னூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் மு.தனபாலன், அன்னூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, மாநில பொறியாளர் அணி இணைச் செயலாளர் அம்பாள் நந்தகுமார், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அன்னூர் ஆர்.நடராஜன், செயல் அலுவலர் கார்த்திகேயன் உள்பட துணைத் தலைவர், கவுன்சிலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.




ஆலந்தூர் சட்டமன்ற தொகுதியில் ஆதம்பாக்கம், பாலகிருஷ்ணா தெருவில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையத்தின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. , சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் கோ.பிரகாஷ், சந்திரன் எம்.சி. .பூங்கொடி ஜெகதீஸ்வரன் எம்.சி., ரேணுகா சீனிவாசன், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில், பெரம்பலூர், குன்னம்

# சட்டமன்றத் தொகுதி BLA2,(வாக்குச்சாவடி நிலை முகவர்கள்) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், அக். 8-

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

மேனாள் ஒன்றிய அமைச்சர் கழகத் துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., வழி காட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதி BLA2,(வாக்குச்சாவடி நிலை முகவர்கள்)

SIR(SUSPENSION INDENSIND REVISION) ஆலோசனைக் கூட்டம் நாளை, (09.10.2025, வியாழக்கிழமை), மாலை 3.00. மணியளவில், எளம்பலூர் சாலையில் உள்ள கர்ணம் சுப்பிர மணியம் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு,சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்,

குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் காடூர் பா.கவியரசு வரவேற்புரையில் நடைபெறுகிறது.இந்த கூட்டத்தில் வழக்கறிஞர் அணி மத்திய மண்டல பொறுப்பாளர் சுவை.சுரேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் BLA2(வாக்குச்சாவடி நிலை முகவர்கள்) உள்ளிட்டோர் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை!

# திருச்சி மத்திய மாவட்டம் - திருவரங்கம் தொகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் க.வைரமணி வேண்டுகோள்!



திருச்சி, அக். 8 -

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி வேண்டுகோள் வருமாறு:-

திருச்சி மத்திய மாவட்டம் திருவரங்கம் தொகுதிக்கு உட்பட்ட தி.மு.க நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் தி.மு.க இளைஞர் அணி செயலாளரும், தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (08.10.2025 புதன்க்கிழமை) காலை 09.00 மணியளவில் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் திருவரங்கம் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், கிளைக்கழக செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், (BLA2) பாக நிலை முகவர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சேலத்தில் தீபாவளிக்கான ஆவின் பொருள்கள் விற்பனை!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், அக். 8 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தீபாவளி பண்டிகை 2025க்கான ஆவின் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனையினைத் தொடங்கி வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தீபாவளி பண்டிகை 2025க்கான ஆவின் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி அவர்கள் ஆகியோர் முன்னிலை யில் மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைத்தார். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமாகும். இந்நிறுவனம் கிராமங்களில் உள்ள விவசாய பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் நோக்கிலும், கிராம மற்றும் நகர்புறங்களில் வாழும் பொது மக்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்களை இலாப நோக்கம் அல்லாது சேவை நோக்கோடு நியாயமான விலையில் வழங்கிடும் அத்தியாவசிய பொது சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தமிழ்நாட்டிலேயே பால் மற்றும் பால் உபப் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனங்களின் பட்டியலில் முன்னணி நிறுவனமாக திகழ்ந்து வருகிறது.

சேலம் ஒன்றியத்தின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 6.50 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு அதில் 2.25 லட்சம் லிட்டர் பால் உள்ளூர் விற்பனைக்கும், சென்னை தேவைக்கு 2.70 லட்சம் லிட்டரும் அனுப்பப்படுகிறது. மீதம் உள்ள பாலில் பால் உபபொருட்களான தயிர், மோர், வெண்ணெய், நெய், பால்கோவா, மைசூர்பா, பால்பவுடர், டெட்ரா மில்க், ஐஸ்கீரிம் என அனைத்தும் தயாரிக்கப்பட்டு சில்லரை விற்பனையாளர்கள், ஒன்றிய பாலகங்கள், மொத்த விற்பனையாளர்கள், தனியார் பாலகங்கள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுவரு கிறது.

மேலும், சேலம் ஆவின் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தூய பசும்பாலிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெய், ஆவின் நெய் மற்றும் தரமான மூலப்பொருட்களைக் கொண்டு சுவை மிகுந்த இனிப்பு மற்றும் கார வகைகளை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில், தீபாவளி 2025 பண்டிகையை முன்னிட்டு சேலம் ஒன்றியத்தில் 42 மெட்ரிக் டன் ஆவின் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கென ஆவினில் பால்கோவா (250 கிராம்) ரூ.130 விலையிலும், ஸ்பெஷல் மைசூர்பா (250 கிராம்) ரூ.140 விலையிலும், கேரட் மைசூர்பா (250 கிராம்) ரூ.140 விலையிலும், மில்க் சேக் (250 கிராம்) ரூ.140 விலையிலும்,, முந்திரி கேக் (250 கிராம்) ரூ.185 விலையிலும், ஆவின் மிக்சர் (250 கிராம்) ரூ.85 விலையிலும், பாதாம் மிக்ஸ் பவுடர் (250 கிராம்) ரூ.120 விலையிலும் விற்பனைக்கு தயாராக உள்ளது.

எனவே, பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் பொருட்டு பொதுமக்கள் எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு தூய பசும்பால் மற்றும் நெய்யினால் தயாரிக்கப்படும் ஆவின் இனிப்பு மற்றும் காரவகைகளை வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், ஆவின் பொது மேலாளர் ப.குமரேஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மாணவர் அணி ஆலோசனை கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி மாணவர் அணியின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் திருப்பூர் தெற்கு மற்றும் பல்லடம் சட்டமன்ற தொகுதிகளுக்கான வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழகச் செயலாளர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) மற்றும் எதிர்வரவுள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்தான பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் டி.கே.டி மு.நாகராசன், ராமமூர்த்தி, ம.பார்த்திபன், குமார், டிஜிட்டல் சேகர், வழக்கறிஞர் சி.நந்தினி, மேங்கோ அ.பழனிசாமி, மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், பி.ஆர்.செந்தில்குமார், வைஸ் பி.முருகசாமி, எஸ்.என் குமார், கோவிந்தராஜ், கா.ஈஸ்வரமூர்த்தி, தம்பி ப.குமாரசாமி, மு.நந்தகோபால், ந.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி, சீனிவாசன், பொ.அசோகன், ஜே.சி.பி. எஸ்.பாலுசாமி, பி.கே.கனகராஜு, சிவாச்சலம், துரைமுருகன், ந.ராஜேந்திரகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, கல்லேரி பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்தனர். இதில் வெள்ளக்கோயில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.சந்திரசேகரன், முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, பேரூராட்சித் தலைவர் சுந்தரம்பாள், துணை தலைவர் மு.க.அப்பு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில், மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மண்டலத் தலைவர்கள் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ. உமா மகேஸ்வரி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.